Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 20, 2021

வெள்ளிக்கிழமை ஒகஸ்ட் 20, 2021 | ஒளி: 07 கதிர்: 79 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பாணின் விலை கூடியது; தீன்பண்டங்கள் எகிறின



பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை 10 ரூபாயால் அதிகரிக்கவுள்ளதாக அறிவிப்பொன்றை விடுத்துள்ள அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், அந்த விலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (23) முதல் அமலாகுமென அறிவித்துள்ளது.


தொடர்ச்சி P2

## பீதி

இன்று (20) வெள்ளிக்கிழமையுடன் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என வதந்தி பரவியது. இதனால், மூடப்படாத நகரங்களில் நேற்று (19) மாலை வேளையில் ஒருவகையான பீதி ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நகரங்களுக்கு விரைந்திருந்த மக்கள், தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவுக்கு செய்தமையையும் அவதானிக்க முடிந்தது.

# மூடவும் மூடவும்



## பல முனைகளிலும் அழுத்தம்; மகாநாயக்க தேரர்களும் வலியுறுத்து
## பங்காளிகளில் பத்து பேர் கடிதம்; சுதந்திரக் கட்சியும் கோரியுள்ளது

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை இரண்டொரு வாரங்களுக்கேனும் முழுமையாக முடக்கவேண்டும் என, பல தரப்பினரும் கோரிக்கையை விடுத்துள்ளனர். அத்தரப்பினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதங்களை அனுப்பிக் கோரியுள்ளனர்.

அந்தக் கோரிக்கைகள் தொடர்பில், இந்த மின்னிதழ் தயாரிக்கப்பட்டு முடியும் வரையிலும் எவ்விதமான உத்தியோகபூர்வ பதிலும் வெளியாகவில்லை.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பங்காளிக் கட்சிகளில் 10 கட்சிகள், மூன்று வாரங்களுக்கு நாட்டை முழுமையாக முடக்குமாறு கோரிக்கை விடுத்து, கடிதமொன்றை எழுத்தியுள்ளன. அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்தன தேரர், ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர், தத்தமது கட்சிகளின் சார்பில் மேற்கண்ட கோரிக்கையை கூட்டாக விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## அழுத்தத்தின் கீழ் ஜனாதிபதி: இன்றுதான் இறுதி தீர்மானம்



நாட்டை முழுமையாக முடக்கிவிடுமாறு ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.
இந்நிலையில், நாட்டை முடக்குவதா அல்லது கட்டுப்பாடுகளை மென்மேலும் இறுக்குவதா என்பது தொடர்பிலான இறுதித் தீர்மானம், இன்று (20) எட்டப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

## 27 வைத்தியர்கள் உட்பட 297 பேருக்கு கொரோனா



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் 27 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## மருந்துகளின் ஊடாக விளையாடக் கூடாது

### மக்களின் உயிர் முக்கியம் என்கிறார் சஜித்



40 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு நாடு முழுவதும் பாரிய தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. கொரோனா மற்றும் நிமோனியாவுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நிலைக்கு மத்தியிலும் அரசாங்கம் மக்கள் உயிருடன் விளையாடும் விளையாட்டுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

## இரண்டு விவகாரங்களிலும் இனித் தாமதம் வேண்டாம்

### அரசாங்கத்துக்கு ரணில் ஆலோசனை




கொரோனா தொற்றின் பிறழ்வு எதிர்வரும் நாள்களில் எதிர்பாராத வகையில் அதிகரிக்கும் என நம்பப்படுவதால், மக்களின் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள, சுவாசத்துக்கு உதவும் 2,000 உபகரணங்களையாவது (குறைந்தது வெண்டிலேட்டர்களையாவது) தயார் நிலையில் வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர், ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மருந்து வேண்டுமா?



அரச வைத்தியசாலை கிளினிக்குகளில் கலந்து கொள்பவர்கள் தங்களுக்கான மருந்துகளை வீட்டுக்கு பெற்றுக்கொள்ள விசேட அலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

0720720720 என்ற இலக்கத்தை அழைப்பதன் மூலம் இந்தச் சேவையைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### கிழக்கில் கொவிட் மரண வீதம்

## நான்கு மடங்காக அதிகரிப்பு



■ வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தாக்கத்தால் மரணமாவோரின் எண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்துள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அம்பாறை, மட்டு. மாவட்டங்கள் ஆபத்தில்

■ வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மற்றும் கல்முனைப் பிராந்தியம் ஆகியன படுமோசமான கொரோனா தொற்றுகளையும் மரணங்களையும் சந்தித்து வருகின்றன.

தொடர்ச்சி P2






கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட கொள்ளுப்பிட்டி பகுதியில், பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (படங்கள்: பிரதீப் தில்ருக்‌ஷண)

### ரயில்வே ஊழியர்களில்

## 360 தொற்று; மூவர் மரணம்



ரயில்வே திணைக்கள ஊழியர்கள் 360 பேர் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதுடன், தொற்றுக் காரணமாக மூவர் மரணித்துள்ளனர்.

அத்துடன், ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ள காரணத்தால், கரையோர மார்க்கத்திலான 5 ரயில் நிலையங்கள் உட்பட சுமார் 10 ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, நேற்று (19) முதல் 82 ரயில் சேவைகள் மாத்திரமே இடம்பெற்றதாகவும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

## இதுதான் அந்த புதிய வழிமுறை

கொரோனா நோயாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு உட்படுத்தல் அல்லது வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்காக புதிய நடைமுறைகள் நேற்று (19) முதல் பின்பற்றப்படுகின்றன. இந்த நடைமுறை மேல் மாகாணத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றது.




தொடர்ச்சி P2

### அரசியலமைப்பு தயாரிப்பதை

## தாமதிக்காதீர்கள் என்கிறார் ஐயா

■ எஸ். நிதர்ஷன்



அரசியலமைப்பைத் தயாரிக்கும் நடைமுறை இனியும் தாமதிக்கப்படலாகாது என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், 'ஜூன் 16ஆம் திகதி மாலை 4 மணிக்கு, ஜனாதிபதி செயலகத்தில் தாங்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் சந்திப்பதாக ஜுன் 07ஆம் திகதியன்று, கடிதம் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மூடவும் மூடவும்



இந்நிலையில், அரசாங்கத்தின் பிரதான பங்காளியான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், நாட்டை முழுமையாக இரண்டொரு வாரங்களுக்கு மூடிவிடுமாறும் இதனூடாகவே கொரோனா வைரஸ் தொற்று பரவுதலை ஓரளவுக்கேனும் தடுக்கமுடியுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது.

அது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு கடிதம் எழுதி தெளிவுபடுத்தியுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, ஒருவாரத்துக்காவது, நாட்டை முடக்க நடவடிக்கை எடுக்குமாறு, கண்டி, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் கையெழுத்துகளுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோருக்கு அவசரக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆரம்பத்தில் நாட்டில் கொரோனா தொற்றுப் பரவ ஆரம்பித்த போது, தனிமைப்படுத்தல் சட்டத்திட்டங்களை அமுல்படுத்தி, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுத்த வேலைத்திட்டங்களைப் பாராட்டும் அதேவேளை, இன்றைய நிலையில் நாடு மிகவும் மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளது.

நாட்டில் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளதுடன், மரணங்களும் அதிகம் பதிவாகி வருகின்றன.

இந்த நிலையில் பரவும் தொற்றைக் கட்டுப்படுத்துவது சிக்கலைத் தோற்றுவித்துள்ளதென, சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், நாட்டை ஒரு வாரத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுத்து, மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டை முடக்குவதற்கான தீர்மானத்தை, இன்று (20) எடுக்கவில்லை எனில், எதிர்வரும் திங்கட்கிழமை (23) முதல் தொடர்ச்சியாக வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்து, நாட்டை தாங்கள் முடக்குவோம் என அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி எச்சரித்துள்ளது.

நாட்டை முழுமையாக முடக்குவதற்கான வலியுறுத்தல்கள் வலுப்பெற்றுள்ள நிலையில், பல நகரங்களைச் சேர்ந்த வர்த்தக சங்கங்கள், நகரங்களை முடக்குவதற்கான தீர்மானங்களை தாங்களாகவே எடுத்து, நகரங்களை முடக்கிக்கொண்டுள்ளன.

நாட்டில் ஒவ்வொருநாளும் அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணிப்போரின் எண்ணிக்கை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, நாட்டை முடக்குமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

எனினும், நாட்டை முழுமையாக முடக்குவதன் ஊடாக, அன்றாடம் கூலித்தொழில்களை செய்து ஜீவியம் நடத்துவோர் பெரிதும் பாதிக்கப்படுவர். ஆகையால், கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கும் ஏற்கெனவே தளர்த்தப்பட்ட சில தளர்வுகளை இறுக்கவும் முடிவு செய்துள்ள அரசாங்கம் அது தொடர்பில், நேற்று முன்தினம் (18) அறிவித்தல் ஒன்றையும் விடுத்திருந்தது.

இதேவேளை, கொரோனா தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் உரிய தரப்பினருக்கு அரசாங்கம் ஆலோசனைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அழுத்தத்தின் கீழ் ஜனாதிபதி: இன்றுதான் இறுதி தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையில், கொவிட்-19 செயலணி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கூடும். அந்த வகையில், அந்தச் செயலணி இன்றும் கூடும்.

இதன்போது சுகாதாரத் தரப்பினராலும், துறைசார் நிபுணர்களாலும் முன்வைக்கப்படும் பரிந்துரைகளுக்கு அமையவே, அடுத்த கட்டத் தீர்மானங்கள் எட்டப்படவுள்ளன.



# பாணின் விலை கூடியது தீன்பண்டங்கள் எகிறின

இதன்படி, ஒரு இறாத்தல் பாணின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் கேக்கின் விலையை 100 ரூபாயால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அச்சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயரட்ன தெரிவித்தார்.

பட்டர், சீனி மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதனால், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

37.5 கிலோகிராம் நிறையைக் கொண்ட பெரிய காஸ் சிலிண்டரின் விலை,



இன்றைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் 900 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது. இது பேக்கரி பொருள்களை உற்பத்தி செய்வதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்றார்.

# மருந்துகளின் ஊடாக விளையாடக் கூடாது

இலங்கையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறித்து, இந்த வருடம் மே மாதம் 4ஆம் திகதி முதற்தடவையாக பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியதாகவும் இது ஹன்சாட்டில் உள்ளது என்றார்.

ஆனால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு குறித்து பல சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தப்பட்டாலும் அவை அனைத்தும் ஆளும் தரப்பினருக்கு நகைச்சுவையாகவே காணப்பட்டது. நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மருந்துகளைப் பரிந்துரைக்கவில்லை என்பதுடன், சுகாதார விசேட வைத்தியர்களின் எண்ணங்களையே சுட்டிக்காட்டியிருந்தோம் என்றார்.

இந்த விடயம் குறித்து 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது, ஆளுங்கட்சியின் அமைச்சரொருவர் பொறுப்பற்ற முறையில் பதிலை வழங்கியிருந்தார்.

கொரோனாவுக்கு பாணியை விளம்பரப்படுத்தியவர்கள் உள்ள நாட்டில், இதை விட பொறுப்பான பதிலை எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால், அவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் நாட்டில் இழக்கப்படும் உயிர்களை எம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றார்.

ஏனெனில், அரசாங்கம் பொறுப்புக் கூறல் மற்றும் பொறுப்பு ஆகிய இரண்டையும் கடவுளிடம் ஒப்படைத்துள்ளதுடன், இதன் பிரதிபலனாக இன்று நாட்டில் கொரோனா மரணங்கள் அதிகரித்த நாடுகள் வரிசையில் எமது நாடும் இடம்பிடித்துள்ளது.

எனவே, இந்தத் தொற்றுப் பரவலையும், மரணங்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத அரசாங்கம், கொரோனா பரவல் மற்றும் அதனால் ஏற்படும் மரணங்களில் இலங்கை ஏனைய நாடுகளைப் பின்தள்ளி முன்னுக்கு வந்துள்ளதை பாரிய புரட்சி எனக் கருதிக் கொண்டாடுவதற்கு சிந்திக்கின்றதா எனக் கேள்வி எழுப்பினார்.

# இரண்டு விவகாரங்களிலும் இனி தாமதம் வேண்டாம்

வெண்டிலேட்டரின் தேவையை, கொரோனா பரவ ஆரம்பிக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்துள்ள அவர், 2019ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.

அப்போது நாம் சுட்டிக்காட்டியதை ஆராய்ந்து, வெண்டிலேட்டர் உற்பத்தியை அரசாங்கம் ஆரம்பித்திருந்தால், தற்போது இழக்கப்படும் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இணையவழி ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் உருவாகியுள்ள தலிபான்களின் ஆட்சியின் கீழ், மீண்டும் ஆப்கானிஸ்தான் அடிப்படைவாத குழுக்களின் மத்திய நிலையங்களாக மாறும் என்ற சந்தேகம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளதை நினைவில் வைத்துக்கொள்வது அவசியம் என்றார்.

இதன் அச்சுறுத்தல் முஸ்லிம் நாடுகளுக்கு மாத்திரமின்றி ஏனைய நாடுகளுக்கும் ஏற்படும். எனவே, இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

தலிபான் ஆட்சியை ஏற்றுக்கொள்வது எமது கடமை இல்லை. எனவே, அங்கு சாதாரண நிலை தோன்றி, தீவிரவாதக்குழுக்கள் இல்லாமல் செய்யப்படும் போதே, எம்மால் ஆப்கானிஸ்தானை அரசாக ஏற்றுக்கொள்ள முடியும் என்றார்.

அத்துடன், காபூலில் உள்ள இலங்கைத் தூதரகத்தை அகற்றவேண்டும். என தெரிவித்த அவர், வேறு ஒரு மத்திய ஆசிய நாட்டில் எம்மால் தூதரகமொன்றை அமைக்க முடியும்.

எனவே, தலிபான் அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்காலம் குறித்து சிந்தித்து அரசாங்கம் செயல்படுவது அவசியம்.

ஏனெனில், தீவிரவாதிகளின் மத்திய நிலையமாக ஆப்கானிஸ்தான் மாறினால், அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் இப்போதிருந்தே முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# 27 வைத்தியர்கள் உட்பட 297 பேருக்கு கொரோனா



இதற்கு மேலதிகமாக 105 தாதியர்களுக்கும், அந்த வைத்தியசாலையின் பணியாளர்கள் 192 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 600 க்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 90 தொற்றாளர்கள் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வைத்தியசாலையில் பலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பான எண்ணிக்கையைக் கூற முடியாதென வைத்தியசாலையின் பணிப்பாளர் குமார விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## நான்கு மடங்காக அதிகரிப்பு

என்றுமில்லாத வகையில் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுக்கள் அதிகரித்துச் செல்வதாகவும் இதை மக்கள் உணராவிடின், இந்தப் பேராபத்தான நிலை, நினைத்துப் பார்க்க முடியாத விபரீத விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கிழக்கு மாகாணத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை தாண்டியுள்ளது. மரணங்களின் எண்ணிக்கை 500ஐஅண்மித்துள்ளது. நேற்று (19) வரை 31,276 தொற்றுகளும் 495 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மூன்றாம் அலையில் மட்டும் 27,508 தொற்றுகளும் 469 மரணங்களும் சம்பவித்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணத்தில் வழமைக்கு மாறாக கடந்த 24 மணி நேரத்தில் 639 தொற்றுகளும் 12 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. டெல்டாவின் பிரசன்னமும் அம்பாறையில் ஏற்பட்டுள்ளது. இது கிழக்கில் மற்றுமொரு பேராபத்து நெருங்குவதை ஆணித்தரமாக சொல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அம்பாறை, மட்டு. மாவட்டங்கள் ஆபத்தில்

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மற்றும் கல்முனைப் பிராந்தியம் ஆகியன படுமோசமான கொரோனா தொற்றுக்களையும் மரணங்களையும் சந்தித்து வருகின்றன.

அம்பாறைப் பிராந்தியத்தில் இறுதியாக 285 தொற்றாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 280 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

அம்பாறைப் பிராந்தியத்தில் இறுதியாக அதிகூடிய 79 தொற்றாளர்கள் உகனைப் பிரதேசத்திலும் 59 தொற்றாளர்கள், தெஹியத்தகண்டியவிலும் 41 அம்பாறை நகரப் பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ள அதேசமயம், கல்முனைப் பிராந்தியத்தில் அதிகூடிய 30 தொற்றாளர்கள் பொத்துவிலில் இனங்காணப்பட்டுள்ளனர்.

# இதுதான் அந்த புதிய வழிமுறை




புதிய முறைமைகளின் கீழ் தொலைபேசியினூடாக தகவல்களை வழங்குதல் குறுந்தகவல் (SMS) ஊடாக அறிகுறிகள் குறித்து அறிவிக்க முடியும். இதற்காக 1904 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# நோய் தாக்கம் அதிகரித்திருப்பின் அந்த நோயாளர்கள் A இடைவெளி (Space) வயது இடைவெளி தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெளி விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு குறித்த இலக்கத்திற்கு குறுந்தகவல் அனுப்ப முடியும்.

# காய்ச்சல் மாத்திரம் ஏற்பட்டிருப்பின் அந்த நோயாளர்கள் B இடைவெளி வயது இடைவெளி தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெளி விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு 1904 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்ப முடியும்.

# எவ்வித நோய் அறிகுறிகளும் தென்படாத நோயாளர்கள் C இடைவெளி வயது இடைவெளி தேசிய அடையாள அட்டை இலக்கம் இடைவெளி விலாசம் என்பவற்றை குறிப்பிட்டு 1904 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்ப முடியும்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் குறுந்தகவல்கள் கொவிட் ஒழிப்பு தேசிய மத்திய நிலையத்தின் ஊடாக வைத்திய குழுக்களுக்கு அறிவிக்கப்படும்.

நோயாளர்கள் வழங்கும் தகவலுக்கு அமைய 247 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அவர்களைத் தொடர்புகொண்டு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக அம்பியூலன்ஸ் சேவை உள்ளிட்ட ஏனைய சிகிச்சை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தாமதிக்காதீர்கள் என்கிறார் ஐயா

அச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாகவும் அச்சந்திப்புக்கு, விரைவில் பிறிதொரு திகதி வழங்கப்படுமெனவும் தனக்கு 15ஆம் திகதி மாலை தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மறுநாள் 16ஆம் திகதி காலையில், மேலுமொரு தொலைபேசி அழைப்பின் மூலமாக உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர், இந்தச் சந்திப்பை விரைவாக நடத்துவதற்கான திகதி மீள நிர்ணயிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட இரண்டு கடிதங்கள் எனக்குக் கிடைக்கப்பெற்றன.

அதற்கு மேல் தனக்கு எவ்வித்த் தொடர்பாடல்களும் கிடைக்கவில்லை. தாங்கள் விரும்பும்பின்றபோது உங்களை நாங்கள் சந்திப்போம் என்பதை தங்களுக்கு இத்தால் அறியத் தருகிறேன்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது நாடு சுதந்திரத்திலிருந்து பின்வரும் மூன்று அரசியலமைப்புகளைக் கொண்டிருந்ததென்பதைக் குறிப்பிடுடு, அவற்றை சம்பந்தன் இங்கு சுட்டிக்காட்டினார்.

1). ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கத்தால் அவர்களுடைய சொந்த அரசியலமைப்பு வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்துக்கு முன்னர், தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு.

இது, தற்போது பெருமளவு மாற்றமடைந்துள்ளது. ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றிற்கு விரிவான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதனையே தமிழ் மக்களும் ஒரு ஐக்கிய பிரிபடாத இலங்கைக்குள் தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தமது ஜனநாயக தீர்ப்புகளின் மூலம் கோரி வருகின்றனர்.

2). தமிழ் மக்கள் 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்பு தயாரிப்புக்கு பங்களிப்புச் செய்யவில்லை.

3). தமிழ் மக்கள் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு தயாரிப்புக்கு பங்களிப்புச் செய்யவில்லை.

உயிர்களைப் பாதுகாக்க முடியாவிடின்

# அரசாங்கம் விலக வேண்டும்

மக்கள் உயிர்களை பாதுகாக்க முடியவில்லை என்றால், அரசாங்கம் ஆட்சியிலிருந்து விலக வேண்டுமென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, அரசாங்கத்தின் சர்வாதிகார தீர்மானத்தால் நாட்டு மக்கள் உயிரிழக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய ரஞ்சித் மத்தும பண்டார, நாட்டு மக்களின் உயிர்களைப் பாதுகாக்க முடியவில்லை என்றால், நாட்டை நிர்வகிக்கக்கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, அரசாங்கம் விலக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சர்வாதிகார தீர்மானத்தால் ஆயிரக்கணக்கான உயிர்கள் தற்போது வரையில் பலியாகியுள்ளதாகவும், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மோசமான ஆட்சியில் நாடு இருக்கிறது என்றார்.

ஊடகங்கள் முன்பாக அரசாங்கம் பல்வேறு கருத்துகளைக் கூறினால், கொரோனா வைரஸால் உயிரிழப்போரில் உலகில் முதலிடத்துக்கு இலங்கை வந்துள்ளது எனவும் தெரிவித்த ரஞ்சித் மத்தும பண்டார, வீட்டிலேயே



பலர் உயிரிழக்கும் நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வாரம் வைத்தியசாலைகளின் மரங்களுக்கு கீழும், கட்டிலுக்கு கீழும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் படுத்துறங்கும் நிலை ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து அரசாங்கம் தொற்றாளர்களை வீடுகளுக்கு அனுப்பிவிட்டு, தற்போது வைத்தியசாலைகளில் தொற்றாளர்கள் இல்லை என கூறுவதாகவும் தெரிவித்தார். உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காமையே நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணம். அரசாங்கத்தின் தவறுகளால் மக்கள் தங்களது வாழ்க்கையை பலிகொடுக்கிறார்கள் என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் 200 பேர் வரையில் உயிரிழந்த நிலையில், தற்போது 20 ஆயிரம், 30 ஆயிரம் மக்கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வீட்டுக்கு கொரோனாவை விற்றவர் சிக்கினார்




வர்த்தகர் ஒருவர் தனது வீட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை வைத்துக்கொண்டு, தனது வர்த்தக நிலையத்தைத் திறந்து பொருள்களை விற்பனை செய்துவந்த சம்பவமொன்று அத்தனகல பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

நீர்கொழும்பில் கடந்த 17ஆம் திகதி அப்பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது, இந்தத் தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறி இந்த வர்த்தக நிலையம் திறந்து வைத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு வர்த்தகர்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்தியுள்ளார்களா? சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை அவர்கள் பின்பற்றியுள்ளார்களா என்பது தொடர்பில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அத்தனகல பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது பல வர்த்தகர்கள் கொரோனா ஒரு தடுப்பூசியை கூடச் செலுத்தி கொண்டிருக்கவில்லை என்பதும், வர்த்தக நிலையங்களில் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

தடுப்பூசிகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் போக்குவரத்து பிரிவின்

## செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

■ என்.ராஜ்

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக, யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில், நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று சற்றுத் தீவிரமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அதேவேளை, இறப்புகளும் அதிகரித்து செல்கின்ற போக்கு காணப்படுவதாகவும் கூறினார்.

இந்த நிலையில், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அதேபோல கொன்சியூலர் பிரிவு, பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்படுத்தப்படுகின்றன எனவும், அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மோட்டார்



போக்குவரத்து திணைக்கள நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி, அதனை மீள ஒரு ஒழுங்கு முறையில் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு (23) பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும், மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

எனவே, பொதுமக்கள் மிகவும் அத்தியாவசிய நோக்கங்களுக்காக மாத்திரமே, மாவட்ட செயலகத்துக்கு வருகை தர வேண்டும். எனினும், தற்போதுள்ள சூழ்நிலையில, நேற்றும் (19) இன்றும் (20), இந்த கிளைகளை மூடி, சேவைகளை நிறுத்தியுள்ளோம் என்றார்.

'எதிர்வரும் திங்கட்கிழமையில் (23) இருந்து குறிப்பிட்ட திணைக்களங்களுக்குரிய சேவைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்படுத்தப்படும்' என்றார். அதேபோல், மோட்டார் திணைக்களத்தின் எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோக ஓட்டப் பயிற்சி என்பன தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், மோட்டார் போக்குவரத்து பிரிவை பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அந்தப் பதிவின் ஊடாக பொதுமக்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமெனவும் கூறினார்.

அத்துடன், 'ஏற்கெனவே மோட்டார் திணைக்களம் அறிவித்துள்ள புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டு ள்ளது. எனவே மக்கள் அவதியுராது மிக மிக அத்தியாவசிய தேவைகளை மாத்திரம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்' என்றும், மாவட்டச் செயலாளர் கூறினார்.

தொற்றாளர்களின்

## சடலங்களை எரிக்க சொந்த பணத்தை வழங்க தயார்

கொரோனா வைரஸால் உயிரிழப்போரை எரிப்பதற்கு மாகாண சபைகளுக்குப் பணம் தேவைப்பட்டால், அப்பணத்தை எனது சொந்த நிதியிலிருந்து வழங்க தயாராக இருக்கிறேன் என இராஜாங்க அமைச்சர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.



**“ தம்புள்ளை கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் இடவசதிகள் இல்லை. இது தொடர்பில், சமூகவலைத்தளங்களில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும், இது தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கவனம் செலுத்தினார்**

தம்புள்ளை கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் இடவசதிகள் இல்லை. இது தொடர்பில், சமூகவலைத்தளங்களில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும், இது தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கவனம் செலுத்தியதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிதியிலிருந்து கொரோனா வார்ட்டை நிர்மாணிக்க தனக்கு பசில் அறிவுறுத்தியதாகவும், கட்சி நிதியிலிருந்து வைத்தியசாலையின் வார்ட் நிர்மாணிக்கப்படுவது இலங்கையில் மாத்திரமென்றார்.

இவ்வாறான பணிகளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மாத்திரமே முன்னெடுக்கும் எனவும், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடலை எரிப்பதற்கு பலரும் பணம் வழங்குவதில்லை.


எனவே, இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு தேவையான நிதியை தனது சொந்த நிதியிலிருந்து மாகாண சபைகளுக்கு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

## 13 சிவில் பாதுகாப்பு வீரர்களுக்கு தொற்று

■ க. அகரன்

வவுனியாவில், 13 சிவில் பாதுகாப்பு படைவீரர்கள் உட்பட 109 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா வடக்கு, தெற்கு, செட்டிகுளம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனை முடிவுகள், செவ்வாய்க்கிழமை (17) இரவு வெளியிடப்பட்டிருந்தன.



அதன் அடிப்படையில், வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு படை முகாமில் கடமை புரியும் 13 வீரர்கள் உட்பட 109 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

அமைச்சரவை மாற்றத்தால்

## கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது



சீட்டுக்கட்டை மாற்றுவதுபோல முன்னெடுக்கப்பட்ட அமைச்சரவை மாற்றத்தால், கொரோனா வைரஸை துளியளவேனும் கட்டுப்படுத்த முடியாதெனத் தெரிவிக்கும் ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டும் கேக் சாப்பிட்டுக்கொண்டும் எடுக்கும் தீர்மானங்களால், நாடு முழுமையாக நாசமாக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டை கடவுளிடம் ஒப்படைப்பதாகக் கூறிய கெஹலியவுக்கு, சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளதாகக் கடுமையாகச் சாடிய அவர், அரசாங்கத்தின் இயலாமை இதனூடாக வெளிப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வைரஸ் தொடர்பான நிபுணரான பேராசிரியர் திஸ்ஸ விதாரனவின் கருத்துகளையோ ஆலோசனைகளையோ அரசாங்கம் ஒருபோதும் செவிமடுப்பதில்லை. அவர்களை ஒருபுறம் தள்ளி வைத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்துக்கு கடந்த காலங்களில் இருந்தே மக்கள் வாழ்க்கை தொடர்பில் எந்தவிதமான அக்கறையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

இரவு நேரத்தில் ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் அமல் செய்துள்ளது. இரவில் யார் வெளியில் வரப்போகிறார்கள்? திருமணத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், திருமண ஜோடிகள் இரவில் திருட்டுத்தனமாக ஓடிச் செல்வார்கள் என்பதாலா? எனவும் அவர் இதன்போது வினவினார்.

அரசாங்கம் இதுபோன்ற விளையாட்டுத்தனங்களை நிறுத்திவிட்டு, சுகாதாரத் தரப்பினர், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, நாட்டைக் குறைந்தது மூன்று வாரங்களுக்கேனும் முடக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

புத்தளம் நகரை பாதுகாக்க

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை

■ எம்.யூ.எம்.சனூன்

சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றிலிருந்து புத்தளம் நகரைப் பாதுகாப்பதற்கான சில பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை புத்தளம் நகரசபையின் தவிசாளர் எம். எஸ்.எம். ரபீக் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

வீடுகளில் மரணிக்கும் ஜனாஸாக்களுக்கு அரசாங்கத்தால் பி.சி.ஆர் பரிசோதனைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள போதிலும், ஜனாஸாக்களை குளிப்பாட்டும்போது உரிய சுகாதார வழிமுறைகளை பேணும்படி வேண்டப்படுகின்றனர். அதாவது குளிப்பாட்டும் நபர்கள் முகக் கவசம் அணிதல், கையுறை அணிந்து உடல் முழுவதையும் மறைக்கக் கூடிய ஆடையை அணிந்து மிகப் பாதுகாப்பான முறையில் ஜனாஸாவைக் குளிப்பாட்டல் வேண்டும்.




நகரசபையின் புத்தளம் மாவட்ட விளையாட்டரங்குத் தொகுதியின் உள்ளக விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், உடற்பயிற்சி கூடம் என்பன நேற்று 18ஆம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்படுகிறது.

ஞாயிறு வாராந்த சந்தை எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிறு முதல் தொடர்ந்து 3 வாரங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தினச் சந்தைக்கு வெளியூர்களிலிருந்து வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரும் வியாபாரிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா பரவல் நிலைமை மிகத் தீவிரமாக காணப்படுவதாலும் புத்தளம் நகரிலும் தற்போது நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி மரண வீதங்கள் அதிகரிப்பதாலும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு எம்.எஸ்.எம். ரபீக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கொழும்பு வர்த்தக நிலையங்களை மூடுமாறு கோரிக்கை

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கையாக கொழும்பு நகரத்தின் அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் மூடுமாறு, கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று (19) அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில், “கொரோனாவைக் கட்டுப்படுத்த கொழும்பு நகரத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் சில நாள்களுக்கு மூடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம், கொழும்பு நகரத்தின் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எமக்கு ஆதரவு வழங்குங்கள் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பு நகரத்திலேயே டெல்டா திரிபுகள் 90 சதவீதத்துக்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அநேக வர்த்தக சங்கங்கள் ஒன்றிணைந்து, வர்த்தக நிலையங்களை மூட முன்வந்துள்ளமையையும் அவர் வரவேற்றுள்ளார். “வர்த்தக இலாபத்தைப் பற்றிச் சிந்திக்காமல்



தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அவர்களின் பங்களிப்புப் பாராட்டத்தக்கது. இது வரவேற்கத்தக்க நடவடிக்கை” என்று மேயர் தெரிவித்துள்ளார்.

மேலும், 2022 ஜனவரிக்குள் 30,000 பேர் கொரோனா தொற்றால் மரணித்து விடுவர் என்ற உலக சுகாதார அமைப்பின் எச்சரிக்கையை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், மேயர் ரோஸி சேனாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

## அரசியல் செய்யும் காலம் இதுவல்ல

### எதிர்க்கட்சியினருக்கு சாகர ஆலோசனை

சுகாதாரத் தரப்பினரின் சிறு சிறு தவறுகளைச் சுட்டிக்காட்டி, நாட்டு மக்களைத் தவறாக எதிர்க்கட்சி வழிநடத்துவதாகத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி, அரசியல் செய்வதற்கு இது பொருத்தமான காலமல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சுகாதாரத் தரப்பினரின் சிறு சிறு தவறுகளைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு, நாட்டை எரியவைக்க எதிர்க்கட்சி முயற்சிக்கிறதாகவும், அரசியல் செய்வதற்கு இதுபொருத்தமான தருணமல்ல எனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டு மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும். பின்னர் அரசியல் செய்துகொள்ளலாம் எனவும் எதிர்க்கட்சிக்கு ஆலோசனை வழங்கிய அவர், சுகாதார தரப்பினரின் சிறு சிறு தவறுகளை தூக்கிப்பிடித்து பொதுமக்கள்



நம்பிக்கையை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளில் எதிர்க்கட்சி ஈடுபடக்கூடாது எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் இரு வாரங்கள் தீர்மானமிக்கதென விசேட வைத்திய நிபுணர்கள் கூறுவதாகவும், கொரோனா வைரஸுடன் குறைந்தது இரு வருடங்களாவது வாழப் பழகிக்கொள்ள வேண்டுமெனவும் நிபுணர்கள் கூறுவதாகவும் தெரிவித்தார்.

நடைமுறைகளை மீறி ஓடும் பஸ்கள்

# இடைநிறுத்தப்படும்

■ என்.ராஜ்

மா காணங்களுக்கு இடையில் சுகாதார நடைமுறைகளை மீறி, போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ் சேவைகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென, யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடிதுவக்கு தெரிவித்தார்.

பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், நேற்று (19), இராணுவத்தினரின் நடமாடும் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், இராணுவத் தளபதியின் வழிகாட்டலின் கீழ், நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டமானது, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்றைய தினம் (நேற்று) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகர் பகுதிகளை உள்ளடக்கி, இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு பூராகவும் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தடுப்பூசியைக் கட்டாயமாகப் பெற வேண்டும்.

கடந்த காலத்தில், தடுப்பூசி தொடர்பில் பயம் இருந்திருக்கலாம். ஆனால், இனி அந்தப் பயத்தை தவிர்த்து, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இராணுவ கட்டளைத் தளபதி வலியுறுத்தினார்.

# திருகோணமலையில் தொற்று தீவிரம்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகச் சராசரியாக நாளொன்றுக்கு 109 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் இம்மாத ஆரம்பம் முதல் கடந்த 16ஆம் திகதி வரை 1,639 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் 27 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், தற்போதைய நிலையில் அதிகமானவர்கள் தொற்றுக்கு உட்படுகின்றனர். மாவட்ட மக்களாகிய அனைவரும் கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்புப் பெற, பொறுப்புடன் செயற்படல் வேண்டும். அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பேணல் கட்டாயமானது. அநாவசியமாக நடமாடுவதைத் தவிர்த்து, அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வெளியில் செல்ல வேண்டும்.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும். எனவே, மக்கள் இத்தருணத்தில் தொற்றுப் பரவாத வண்ணம் நாளாந்த வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில்

# வர்த்தகத்துக்கு பூட்டு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பில் இன்று முதல் (20) எதிர்வரும் 30ஆம் திகதிவரை பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், பேக்கரி, உணவகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.செல்வராசா தெரிவித்தார்.

நேற்று முன் தினம் (18) நடைபெற்ற வர்த்தக சங்கக் கூட்டத்தின் போதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தீவிரமடைந்து வரும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், இம்மாவட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு அனைத்து வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பைத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.




மேற்படி கூட்டத்தில் வர்த்தக சங்கத்தின் செயலாளர் தியாகராசா உட்பட அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# புதையல் தோண்ட முயற்சித்தோர் கைது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, அழகாபுரி பகுதியில், புதையல் தோண்ட முயற்சித்த நால்வர், நேற்று முன்தினம் (18) இரவு 8.15 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, குறித்த பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் இருவர் வவுனியாவையும் ஏனையோர் யாழ்ப்பாணம், விசுவமடு ஆகிய பகுதிகளையும் சேர்ந்தவர்களென, தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, புதையல் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்கானர் கருவியும் கைப்பற்றப்பட்டுள்ளது.



# உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுகுளம், ஜீவநகரில் உள்ள மதூர் விளையாட்டுக் கழகத்துக்கு, இராணுவத்தினரால், 25,000 ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

25க்கு முன்னரே

# வயலில் மேயும் கால்நடைகள்




■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக பயிர்செய்கைக்கான கால்நடை கட்டுப்பாட்டு திகதி நிறைவுறுவதற்கு முன்னதாக, வயல் நிலங்களில் கால்நடைகள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அப்பகுதி விவசாயிகள், இதனால், பெருமளவான பயிரழிவுகள் ஏற்படுவதாகவும் கூறினர்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அப்பகுதி மக்கள், இரணைமடு குளத்தின் கீழ், இவ்வாண்டு 17 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தனர்.

தற்போது அறுவடைகள் மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில், கால்நடைகள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர்கள், இந்த நிலையில் கால்நடைகளால் தற்போது பேரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன எனவும் கூறினர்.

அதாவது, சிறுபோகத்தின் போது, கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான ஆரம்ப திகதி கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியாக தீர்மானிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், சிறுபோக நெற்செய்கை அறுவடை முழுமை பெறாத நிலையில், கட்டுப்பாட்டு திகதியான 25ஆம் திகதிக்கு முன்னரே, கால்நடைகள் தற்போது வயல் நிலங்களில் விடப்பட்டுள்ளன

எனவே, எதிர்வரும் 25ஆம் திகதி வரை, கால்நடைகளை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முதிரை மரக்குற்றிகளுடன்

# ஒருவர் கைது

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, அக்கராயன்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்று (19) அதிகாலை, முதிரை மரக்குற்றிகளை கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து, 11 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அக்கராயன் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகள் கப்ரக வாகனத்தில் கடத்தப்படவுள்ளதாக அக்கராயன்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே, முதிரை மரக் குற்றிகளுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

உள்நாட்டு உற்பத்தி இருக்கையில்

# வெளிநாட்டு இறக்குமதியை ஏற்றுக்கொள்ள முடியாது



■ கனகராசா சரவணன்

எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு வளங்கள் இருந்தும் தேவையான பயிர்களை உற்பத்தி செய்யாமல், அவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் மஞ்சள் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில், 50 ஆயிரம் மஞ்சள் கன்றுகள் 5,000 குடும்பங்களுக்கு வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டே அரசாங்கம் சில உணவுப் பொருள்களுக்கு இறக்குமதிக்கான தடையை விதித்திருந்தது.

எமது மாவட்டத்தில் மஞ்சள், இஞ்சி, கறுவா, உளுந்து, பயறு போன்ற பயிர்களை பயிரிடுவதற்கான மண் வளம் செழுமையாகக் காணப்படுகின்றது.

எனினும், எமது உற்பத்திக்குத் தடையாக இருப்பது ஆரம்ப மூலதனச் செலவும் கருவிகளைப் பெற்றுக்கொள்ளுதலும் போன்றனவாகும். இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிலக்கடலை மிளகாய், வாழை போன்ற பயிர்களை உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி கிராமங்களை அடையாளப்படுத்தி வருகின்றோம். நிலக்கடலை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

# சிப்பிமடுவில் கைக்குண்டு மீட்பு



■ க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பிமடுப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று நேற்று முன்தினம் (18) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆயித்தியமலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, தாண்டியடி விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் இக்கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

யுத்த காலப்பகுதியில் இக்கைக்குண்டு கைவிடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின்

# மகளிர் அணி தலைவி செல்வி காலமானார்

■ வா.கிருஸ்ணா



தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான திருமதி செல்வி மனோகர், நேற்று முன்தினம்(18) காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர், மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கல்லடி, உப்போடையைச் சேர்ந்த இவர், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியாக நீண்டகாலமாக அரசியல் பணியாற்றி வந்தவர் என்பதுடன், கட்சியின் மகளிர் அணியைக் கட்டியமைப்பதில் பாரிய பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன



■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், அவர்களுக்கு, முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் அனுசரணையில் மீன்பிடி உபகரணங்கள் நேற்று முன்தினம் (18) வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில், காக்காமுனைப் பிரதேசத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 24 மீனவர்களுக்கு வள்ளம், வலை உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு கடைகளுக்கும் பூட்டு:

# தீர்மானத்தை மீறினால் தனிமை

■ செ. கீதாஞ்சன்




முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்த நிலையங்களை, நாளை (21) தொடக்கம் வரும் வெள்ளிக்கிழமை (27) அதிகாலை வரை பூட்டுவதற்கு, புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக சங்கம், நேற்று (19) தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த நாள்களில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள மருந்தகங்கள், டயர் ஒட்டுக்கடைகள் என்பன மாத்திரம் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மக்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ சங்க நிர்வாகம், சிகை அலங்கரிப்பு சங்க நிர்வாகம் என்பனவும், இந்த வர்த்தக சங்கத்தின் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு, அதற்கான ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாகவும், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் நீதன் தெரிவித்தார். எனவே, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மக்கள், தங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்துகொள்ளுமாறும், அவர் கேட்டுக் கொண்டார்.



மெதுவாகப் பயணிக்கும் லொறிகளிலிருந்து

# கயிற்றின் உதவியுடன் உணவுப்பொருள் திருட்டு

## மூவர் கைது

■ கே. சுந்தரலிங்கம்

நோர்வூட், சென்ஜோன்டிலரி பகுதியில் அத்தியாவசிய பொருள்களைக் கொண்டு சென்ற லொறிகளிலிருந்து, நீண்ட காலமாக பொருள்களைத் திருடி வந்த மூவர், நோர்வூட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம்(18) அதிகாலை சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களிடமிருந்து மரக்கறி மூடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலமாக, நோர்வூட், பொகவந்தலாவை பிரதான வீதிகளில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், பலாங்கொடை, எம்பிலிபிட்டிய பகுதியிலிருந்து பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா , ஹட்டன், நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கு லொறிகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த நிலையில், குறித்த வீதியில் அதிகாலை மெதுவாகப் பயணிக்கும் லொறிகளில், குறித்த திருட்டுக் கும்பலில் ஒருவர் ஏறி, கயிறு மூலம் பொதிகளை கட்டி இறக்குவதாகவும், அதனைத் தொடர்ந்து ஓட்டோவில் பின்னால் வருபவர் ஏற்றிச் சென்று விற்பனை செய்து வருவதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம் சந்தேகநபர்கள் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள நோர்வூட் பொலிஸார், ஹட்டன் நீதவான் நீதிமன்றில் சந்தேகநபர்களை முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தொடரும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு

# காத்திருந்தும் பலனில்லை

## வெறுங்கையுடன் திரும்பும் நுகர்வோர்

■ எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஸ, துவாரகஷன், சுஜிதா

ஹட்டன் நகரில் சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையம் முன்பாக நேற்று (19) அதிகாலை 5 மணியிலிருந்து நுகர்வோர் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

லிட்ரோ சமையல் எரிவாயு முகவர் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட சமையல் எரிவாய காரணமாகவே, இந்த நீண்ட வரிசை என்றும் இதனால் நுகர்வோர் மாத்திரமின்றி முகவர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, நேற்று (19) சுமார் 75 சமையல் எரிவாயு சிலிண்டர்களே ஹட்டன் நகரிலுள்ள அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கும் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், எஞ்சியவையே நுகர்வோருக்கு வழங்கப்பட்டன.

எனினும், அதிகாலை 5 மணியிலிருந்து நீண்ட வரிசையில் காத்திருந்தும் பலருக்கு சமையல் எரிவாயு கிடைக்காமையால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன், நீண்ட வரிசையால், நடைபாதையில் பயணிப்பவர்களுக்கும்



அசௌகரியம் ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, தலவாக்கலை, பத்தனை, கொட்டகலை, அக்கரப்பத்தனை, பசுமலை, டயகம, மன்றாசி ஆகிய நகரங்களிலும் பல வாரங்களாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# கந்தப்பளை வாராந்த சந்தை முடக்கம்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட கந்தப்பளை நகரத்தில் வாராந்தம் சனிக்கிழமை நாளில் இடம்பெறும், பொது சந்தை வியாபார நடவடிக்கைகள், நாளை சனிக்கிழமை (21) முதல் மறுஅறிவித்தல் வரை முடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை நுவரெலியா பிரதேச சபை எடுத்துள்ளதாக சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

இதனூடாக ஏற்படும் அசௌகரிகங்களுக்கு வருந்துவதாகவும், நுவரெலியா பிரதேச சபையின் ஊடாக மக்கள் நலன் கருதி, நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலை நேரங்களில், சபையின் ஊடாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு, பொதுமக்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுப்பதாக அவர் தெரிவித்தார்.



நுவரெலியா மாவட்டத்துக்கு

# எஞ்சிய தடுப்பூசிகளை விரைவுபடுத்தவும்

## சுகாதார அமைச்சருக்கு இராதா எம்.பி கடிதம்

■ டி.ஷங்கீதன்

நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்படுவதுடன், மரணவீதமும் அதிகரித்துள்ளதால், உடனடியாக நுவரெலியா மாவட்டத்துக்கு வழங்கப்பட வேண்டிய எஞ்சிய தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுத் தருவதற்கு, சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், சுகாதார அமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது தடுப்பூசி 354,000 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாகக் கிடைத்துள்ள இரண்டு இலட்சம் இரண்டாவது தடுப்பூசியில், 30 சதவீதமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பிராந்திய சுகாதார திணைக்களத்தின் தொற்றா நோய் பிரிவின் வைத்தியர் மதுர செனவிரத்ண தெரிவித்திருக்கின்றார்.

எனவே, 154,000 பேருக்கு இரண்டாவது தடுப்பூசி தேவைப்படுகின்றது. அதேநேரத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 55,000 பேருக்கு இன்னும் முதலாவது தடுப்பூசி வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் மிக விரைவாக தடுப்பூசிகளை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில்கொண்டு, நுவரெலியா மாவட்டத்துக்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்ப்பதாக, பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தனது கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.



இடைநிறுத்தப்பட்ட

# தமிழ்க் கல்வி சேவை அடுத்த வாரம் ஆரம்பம்

**எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 வரையில் பண்பலை 90.1, 107.3 , 107.5 ஆகிய அலைவரிசைகளில் வழமை போன்று இந்நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. கண்டி எசல பெரஹர நிகழ்வை முன்னிட்டு, பெரஹர நிகழ்வுகள் நேரடி நிகழ்வு ஒலிபரப்புச் செய்யப்படுவதனாலேயே, தமிழ்க் கல்வி ஒலிபரப்புச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது**

■ மெய்யன்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் மலையக வானொலி சேவையுடன் இணைந்து நடத்தும், 'குறிஞ்சிக் குருகுலம்' கல்விச் சேவை, நேற்று (19) முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 வரையில் பண்பலை 90.1, 107.3 , 107.5 ஆகிய அலைவரிசைகளில் வழமை போன்று இந்நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி எசல பெரஹர நிகழ்வை முன்னிட்டு, பெரஹர நிகழ்வுகள் நேரடி நிகழ்வு ஒலிபரப்புச் செய்யப்படுவதனாலேயே, தமிழ்க் கல்வி ஒலிபரப்புச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் தரம் 11 மாணவர்களுக்கான சகல பாடங்களும் திட்டமிட்டவாறு கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்போது, விடுபட்ட பாடங்கள் மாற்று நேரசூசி ஒன்றின் அடிப்படையில், கற்பிக்கப்படுமென மத்திய மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊவாவிலுள்ள 11 தகனச்சாலைகளிலும்

# நெருக்கடி இல்லை

■ எம். செல்வராஜா, சுமணசிறி குணதிலக

ஊவா மாகாணத்தில் காணப்படும் 11 தகனச்சாலைகளின் நடவடிக்கைகள் நெருக்கடிகளின்றி, சுமூகமாக நடைபெற்று வருவதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான தகனச்சாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில், ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் நெருக்கடிகள் ஏற்படாதவாறு, தகனச்சாலைகளில் சடலங்களைத் தகனம் செய்யும் நடவடிக்கைகள் சுமூகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தகனச்சாலைகளின் ஏற்படும் திடீர் பழுது பார்க்கும் வேலைகள், மின்பிறப்பாக்கி பற்றாக்குறை, தகனச்சாலை பணியாளர்களின் பற்றாக்குறை, பணியாளர்களின் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளிட்ட தகனச்சாலைகளுக்கு தேவையான எரிவாயு தேவைகளை தட்டுப்பாடின்றி விநியோகம் செய்தல் போன்ற காரணிகள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.





## தொற்றுநீக்கம்....

நேற்று (20) தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ள கொட்டகலை நகரத்தில் தொற்று நீக்கும் நடவடிக்கை, கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாத்தின் வழிகாட்டலில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: கே. சுந்தரலிங்கம்)

முன்னறிவித்த பின்னரே

# வர்த்தக நிலையங்களை மூடவேண்டும்

■ டி.ஷங்கீதன், பி.கேதீஸ், ஆ.ரமேஸ், சந்ரு

நுவரெலியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களை மூடுவதாக இருந்தால் பிரதேச செயலாளருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவிக்க வேண்டும் என, நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபட ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் அன்றாட தேவைகளை முன்னெடுக்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். பொதுமக்களின் வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்துகொள்வதற்கும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே நகரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தோட்ட வீதிகளை புனரமைக்க அனுமதி

■ ஆ.ரமேஸ், பி.கேதீஸ்

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் 1,132 கிலோ மீற்றர் தூர வீதிகளை புனரமைக்க நெடுஞ்சாலைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்சன் பெர்ணாண்டோ மற்றும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல், நேற்று முன்தினம் (18) மாலை கொழும்பில் நடைபெற்றது.

இதன்போதே, இராஜங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்சன் பெர்ணன்டோவின் ஏற்பாட்டில், தோட்ட பாதைகள் புனரமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காத்திருந்தது போதும்; காத்திரமான தீர்மானமே காலத்தின் தேவை

தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சில கட்டுப்பாடுகளில் இறுக்கமான நடைமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது. சில நகரங்களில் இருக்கும் வர்த்தக சங்கங்கள், நிலைமையின் பேராபத்தை கருத்திற் கொண்டு, நகரங்களை மூடிவிட்டன.

இரண்டு வாரங்கள் மிகவும் தீர்மானம் மிக்கவையென மருத்துவ துறைசார் நிபுணர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்பே எச்சரித்தனர். அதற்கிடையில், கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை, நாளொன்றுக்கு மேலதிகமாக ஆகக்குறைந்தது 10 மரணங்கள் என்ற அடிப்படையில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

நாட்டை ஓரிரு வாரங்களுக்கேனும் முற்றாக முடக்கவேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். அக்கோரிக்கைகளுக்கு வலுசேர்க்கும் வகையில் சமூகநலன்சார் அமைப்புகளும் கோரிவருகின்றன. வவுனியாவில் கூட, நாட்டை முடக்குமாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதெல்லாம், பழைய பல்லவியையே பாடிவரும் அரசாங்கம், ஆர்ப்பாட்டங்களின் பின்னால் எதிர்க்கட்சினரே நாட்டை முடக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்; அதனூடாகவேனும் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற நப்பாசையில் இவ்வாறெல்லாம் நடந்துகொள்கின்றனர் என்றது.

ஆனால், அரசாங்கத்தின் பிரதான பங்காளி கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, உடனடியாக ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. ஏனைய பத்து பங்காளி கட்சிகள் ஒன்றிணைந்து, நாட்டை மூன்று வாரங்களுக்கு முடக்குமாறு ஜனாதிபதி கோட்டாபயவிடம் எழுத்துமூலமான கோரிக்கையையும் விடுத்துள்ளனர்.

இதனிடையே அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க தேரர்களும், அவசர கடிதமொன்றை ஜனாதிபதிக்கு நேற்று (19) எழுதியிருந்தனர். அவர்களும், நாட்டை முழுமையாக முடக்குமாறே கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இன்று வெள்ளிக்கிழமை (20) முதல் நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனில், திங்கட்கிழமையுடன் நாட்டை முடக்கும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமென ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எதிரணியின் வலியுறுத்தல், ஆளும் பங்காளிகளின் கோரிக்கை, சுயமாகச் சிந்தித்து வர்த்தக நிலையங்களை மூடிக்கொள்ளும் வர்த்தகர்களின் முன்மாதிரி, எகிறும் கொரோனா மரணங்கள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்து, காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு காத்திரமான தீர்மானத்தை எடுப்பதே, சிறந்த தலைமைத்துவத்துக்கு அழகாகும்.

சவச்சாலைகளுக்கு வெளியே, குவித்து வைக்கப்பட்டிருக்கும் கொரோனா மரணப் படங்கள் சமூகவலைத்தளங்களில் உலாவுகின்றன; கொழும்பில், இரவில் பிரேத ஊர்வலம் எனக் கருத்துகள் பதிவேற்றப்பட்டுள்ளன; கிழக்கு மாகாணத்தில் இலவசமாக சவப்பெட்டிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன்,

நீராட்டி, பாலூற்றி, தத்தமது மதங்களின் பிரகாரம் இறுதி அஞ்சலி செலுத்தி, செய்த நற்செயல்களை எல்லாம் ஒவ்வொன்றாகக் கூறிக்கூறி ஒப்பாரிவைத்து, நல்லடக்கம் செய்யும் காலம் மலையேறிவிட, குவியலாக குவித்து, டயர்களை போட்டு எரியூட்டும் துர்ப்பாக்கிய நிலைமைக்குள் நாடு விழுந்துவிட்டது. ஆகையால், காலத்தின் தேவை கருதியும் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் வகையிலும் தீர்மானம் எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பொய்களைக் கூறும் அநேகருக்குத் தாங்கள் சொல்லும் பொய்கள், மிகவும் பிடித்துப் போய்விடுகின்றன. சொல்லும் பொய், தற்காலிகமாகப் பயன்தந்தால், அதுவே பெரிய வெற்றி எனக் கருதிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள்.

உலகில் விசித்திரமான நபர்கள் வாழுகின்றார்கள். ஒரு சமயம் கோவிலுக்குச் செல்வதற்காக நடந்து கொண்டிருந்தேன். ஊர் புதிது; ஆனபடியால் ஒருவரிடம் கோவிலுக்குச் செல்லும் வழி கேட்டேன்.

அவரும் செல்லும் வழியைச் சொன்னார். நான் அவர் சொன்னப்படி சென்றேன். ஆனால், அந்த நபர் என்னைப் பின் தொடர்ந்தார்.

உடனே, நான் நின்று, எதற்கு என் பின்னே வருகின்றீர்கள் எனக் கேட்டேன்.

அதற்கு அவரோ, வழிகாட்டிய எனக்குக் காசு தரவில்லை என்றார். எத்தனை, எத்தனை பேர் வந்து போகின்றார்கள். வழிகாட்டக் காசா எனக் கேட்டபோது, சிரிப்பும் கோபமும் வந்தது. கையில் காசைக் கொடுத்ததும் சென்றுவிட்டார்.

எல்லோரும் ஒரேமாதிரி இல்லை. ஆனால், எல்லோரையும் சகித்துத்தான் வாழவேண்டும்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்.

## கடிதங்கள்

### காட்டாக்காலி மாடுகளால் மக்கள் அசௌகரியம்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச சபைக்கு உட்பட்ட கிண்ணியா- கண்டி பிரதான வீதியில், கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் வீதியை அசுத்தப்படுத்தி நடமாடித்திரிவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும், இதனால் வீதி விபத்துகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கட்டாக்காலி மாடுகள் கடைகளிலுள்ள மரக்கறிகள், பழங்கள் போன்றவற்றையும் உண்பதால் வியாபாரிகள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கிண்ணியா பிரதேச சபை மற்றும் அப்பகுதி பள்ளிவாசல்களில் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

-எப். முபாரக்



இலங்கையில் சீனா: விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும் – 07

# தமிழர்கள் சீனாவை நம்பலாமா?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இந்தத் தொடரை எழுதத் தொடங்கிய நாள் முதல், ஒரு கேள்வி பின்தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. பலவகையான கோணங்களில், பார்வைகளில் விமர்சனங்களில் அக்கேள்வி எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

அக்கேள்வி, கடந்த ஒரு தசாப்தகால இலங்கை அரசியல் செல்நெறியின் விளைபொருள். அந்தக் கேள்வி: 'தமிழர்கள் சீனாவை நம்பலாமா' என்பதாகும். இந்தக் கேள்வி, ஒருவகையில் அபத்தமாகத் தெரியலாம்; அல்லது, கையறுநிலையின் விளைவாகத் தோன்றலாம்; அல்லது, இயங்கை அரசியலின் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

ஆனால், இந்தக் கேள்வி ஈழத்தமிழர் அரசியலின் நீண்ட வரலாற்று உற்பவிப்பின் பகுதியின் பாற்பட்டது. பின்கொலனிய இலங்கையில், ஈழத்தமிழர் அரசியலின் நடத்தையின் தொடர்ச்சியாகவே இக்கேள்வி எழுகிறது. இன்று, உலக அரங்கில் சீனாவின் எழுச்சியை கண்கூடாகப் பார்க்கிறோம். ஆசியப் பிராந்தியத்தில், சீனா தன்னைத் தன்னிகரற்ற சக்தியாக நிலைநிறுத்தி உள்ளது.

இந்தியாவின் கொல்லைப்புறம் என அறியப்பட்ட நாடுகள் எதுவும், இப்போது இந்தியாவின் முழுமையான செல்வாக்குக்குள் இல்லை. அதேவேளை, ஒபாமா காலந்தொட்டு அமெரிக்கா முன்னெடுத்து வரும் 'ஆசியாவை மீள்சமநிலைப்படுத்தல்', இப்பிராந்தியத்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் இல்லை.

இந்தியாவும் அமெரிக்காவும் இப்பிராந்திய நாடுகளுடன் பேணுகின்ற அயலுறவுவை விட, வேறுபட்ட வகையில் சீனா, தனது அயலுறவைப் பேணுகிறது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றியோ, மனித உரிமை மீறல்கள் பற்றியோ, போர்க்குற்றங்கள் பற்றியோ மேற்குலகு காட்டிய அக்கறைகள், தமிழ் மக்கள் சார்பானவை அல்ல என்ற உண்மை, இப்போதைக்காவது புரிந்திருக்க வேண்டும். புரிய மறுப்பவர்களும் அதன்வழி வயிற்றுப் பிழைப்பைப் பார்ப்பவர்களும், தொடர்ந்தும் ஜெனீவாக் கூத்துகளை அரங்கேற்றலாம்.

பிராந்திய மேலாதிக்கத்துக்கான இந்திய-அமெரிக்கப் போட்டி, அமைதிப் பேச்சுவார்த்தைகளின் குலைவுக்குப் பின்னர், தெட்டத் தெளிவாக வெளிப்பட்டது. இலங்கை மீதான மேற்குலக நெருக்குவாரம், இந்தியாவுடனான போட்டியின் வெளிப்பாடென்பதற்குப் போர்நிறுத்தம் தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் மாறிமாறி மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்து வந்ததிலும் ஆதாரங்களைக் காண இயலும். எனவே, போர் நிறுத்தமும் அதைத் தொடர்ந்த பேச்சுகளும் மக்கள் நல நோக்கில் இடம்பெற்றவையல்ல.

இலங்கை, அமெரிக்காவின் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்குத் தென்னாசியாவில் முதல்முதலாக வாய்ப்பை ஏற்படுத்திய நாடு. இலங்கையில் தனது இராணுவ, கடற்படைத் தளங்களை நிறுவும் நோக்கம் இன்னமும் அமெரிக்காவிடம் உள்ளது.

எனவே அமெரிக்காவினதும், மேற்குலகினதும் இலங்கை மீதான அவா தொடர்கிறது. எனினும் அதன் நோக்கமோ விளைவோ, தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக அமையாது என்பது உறுதி.

இந்தியா, இலங்கையில் விரும்புகின்ற தீர்வு, இந்திய மூலதனத்தின் தடையற்ற வளர்ச்சியையும் இந்திய மேலாதிக்கத்தையுமே மனதில் கொண்டுள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கை, இலங்கையின் தேசிய பொருளாதார வளர்ச்சியைச் சீர்குலைக்கத் தொடங்கிய நாளிலிருந்து, இந்தியப் பொருளாதார ஊடுருவலும் வணிக ஆதிக்கமும் வளர்ந்தே வந்துள்ளது. போருக்குப் பின்பு அது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முதலீடாகவும், நிலையான இந்திய மூலதன மேலாதிக்க இருப்பாகவும் அமைந்துள்ளது.

கடந்த அரைநூற்றாண்டாகத் தமிழர்கள் நம்பிய, நம்ப வைக்கப்பட்ட இரண்டு தரப்புகள் அமெரிக்காவும் இந்தியாவும் ஆகும். இவ்விரண்டும் தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இன்னமும் சொல்லப்படுகிறது. மோடிக்குக் கடிதம் எழுதும் மோடுகள் இன்னமும் நம்மத்தியில் இருக்கிறார்கள் என்பதை, நகைச்சுவை உணர்வோடு கடந்து செல்வது நல்லது. தமிழர்கள் யாரை நம்பினார்களோ, அவர்களின் கடந்த கால நடத்தை, அவர்களின் நோக்கங்களைத் தெள்ளத் தெளிவாகக் காட்டிநிற்கிறது.

சீனா, கடந்த மூன்று தசாப்தங்களில் மிகவும் மாற்றமடைந்துள்ளது. மாவோ காலத்தில் சோசலிச நாடாக இருந்தவரை விடுதலைப்போராட்டங்களை சீனா ஆதரித்தது.

இன்று முதலாளித்துவ நாடாக மாறிய பிறகு, ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு ஆயுதங்களை விற்பதாக ஆகிவிட்டது. இறுதிப்போரின் போது இலங்கைக்கு, ஆயுதங்களை சீனா வழங்கியிருந்தது. ஆனால், அதைவிடப் பன்மடங்கு ஆயுத, ஆளணி, புலனாய்வு உதவிகளை இந்தியா வழங்கியது.

சீனா, ஒருபுறம் தனது பொருளாதார தர்க்கத்தின் அடிப்படையில் செயற்படுகிறது. மறுபுறம், நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில், ஆட்சியில் யார் இருப்பது என்பது சீனாவுக்குப் பொருட்டல்ல. இலங்கை போலவே, சீனா செல்வாக்குச் செலுத்துகின்ற ஏனைய நாடுகளிலும் நிலைப்பாடு அவ்வாறுதான். சீனாவின் வலுவான பொருளாதாரப் பிடி, அரசுகளைக் கட்டுப்படுத்தப் போதுமானது.

அமெரிக்காவின் மனித உரிமைகள் பூச்சாண்டியோ, இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு அல்லது குழுக்களை ஆயுதபாணியாக்குதல் போன்ற நடைமுறைகளை, இலங்கையில் சீனா பின்பற்றாது. தமிழர்களுக்கான ஆதரவு என்ற போர்வையில், இலங்கையைக் கட்டுக்குள் கொண்டுவர அமெரிக்காவும் இந்தியாவும் முயற்சித்தன; இன்றும் முயற்சிக்கின்றன. சீனாவுக்கு அது தேவைப்படாது.

தென்னாசியப் பிராந்தியத்தில் ஆதிக்கப் போட்டி தொடரப்போவது உறுதி. இதில் ஏதாவதொரு சக்தியுடன் இணைந்து, விடுதலையைப் பெற்றுவிடலாம் என்று நினைக்கும் மனப்பாங்கின் வெளிப்பாடே, அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்புவதும் இப்போது சீனாவை நம்பலாமா என்ற கேள்வியும் ஆகும்.

எந்த வல்லரசையும் நம்பி, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது மூடத்தனம். வல்லரசுகளின் அதிகாரப் பகிர்வின் கணக்கு வழக்குகளில், விடுதலைப் போராட்டங்கள் சில்லறைக் காசுகள் மாதிரி.

வல்லரசு அரசியலிலிருந்தும் பிராந்திய மேலாதிக்கப் போட்டியிலிருந்தும் சுயாதீனமாக இருப்பதன் மூலமும் மக்களைச் சார்ந்து நிற்பதன் மூலமுமே, தேசிய இன விடுதலையை வெல்ல இயலும்.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர்கள், எதையுமே கற்கவில்லை என்று நம்பவில்லை. இந்தியாவையும் அமெரிக்காவையும் சர்வதேச சமூகத்தையும் நம்புமாறு சொல்வதுடன், ஐ.நா சபையினதும் அதன் அமைதிப்படையினதும் குறுக்கீட்டை வேண்டுவோர், முற்றிலும் அறியாமையால் சொல்லவில்லை. சரியானதைச் செய்யும்படி, மக்களுக்கு அறிவுறுத்த இயலாமல் அவர்களைத் தடுக்கிறது எது என்று சிந்திக்க வேண்டும்?

அரசியல் தலைமைகள், மேலாதிக்கவாதிகளினதும் ஏகாதிபத்தியத்தினதும் முகவர்களாகவும் தரகர்களாகவும் மாற்றப்பட்டு வருகிற ஒரு காலத்தில் வாழுகிறோம். தேசிய விடுதலைக்கான போராட்டம் சந்தித்துள்ள பின்னடைவு நிலைமைகள் அதை உறுதிப்படுத்துகின்றன.

எனவேதான், ஒவ்வொரு தேசிய இனத்தின் சார்பிலும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை, தலைவர்கள் முதலில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு விளக்கி, அவர்களது உடன்பாட்டைப் பெறாமல், அந்நிய நாடுகளின் குறுக்கீட்டைக் கோருவது சகல மக்களுக்கும் இழைக்கின்ற பெரிய துரோகமாகும். அவ்வாறான செயல்களைக் கேள்விக்கு உட்படுத்துவது, நம் ஒவ்வொருவரினதும் உரிமையும் கடமையுமாகும்.

தமிழ் மக்கள், எப்போதோ கற்றிருக்க வேண்டிய பாடங்களைக் கசப்பான அனுபவங்களின் மூலமே கற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்று வரை, தமிழ் மக்களின் உண்மையான நண்பர்களையும் நட்பு வேடம் பூண்டவர்களையும் வேறுபடுத்த இயலாத விதமாகப் பல்வேறு புனைவுகள் நம்முன் காட்சிக்கு வைக்கப்பட்டு வந்துள்ளன. அந்தப் புனைவுகளைக் களையாத வரை, விடுதலை வெகுதொலைவில்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் அதி முக்கியமான சக்தி, தமிழ் மக்கள்தான். இதை மறக்கும் போதுதான் அந்நிய உதவிக் கரங்களுக்காகத் தவங்கிடக்கின்ற அவலமும் அவசியமற்ற ஏமாற்றங்களும் நமக்குக் கிடைக்கின்றன.

அமெரிக்காவை நம்பிய ஆப்கானியர்களுக்கு இன்று நடந்ததும் குர்திஸ்களுக்கு நேற்று நடந்ததும், இந்தியாவை நம்பிய அனைவருக்குமான கடந்த நான்கு தசாப்தகால அனுபவங்கள் சொல்கிற செய்தி ஒன்றுதான்.

விடுதலை என்பதும் போராட்டம் என்பதும் மக்கள் சார்ந்தது. அந்நிய சக்திகள் சார்ந்ததல்ல. உரிமைக்கான போராட்டத்தை, மக்கள் தங்கள் தோள்களில் ஏந்திச் சுமக்காதவரை விடுதலை வெல்லக்கூடியதல்ல.

ஓநாய்கள், ஆட்டுக்குட்டிகளைக் கவரக் காத்திருக்கின்றன. ஆட்டுக்குட்டிகள் ஓநாய்களை எதிர்க்காமல் சிங்கங்களையும் சிறுத்தைகளையும் துணைக்கழைப்பது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தம் விடுதலைக்காக அந்நியர் தயவுக்காகக் காத்துக்கிடப்பது ஆகும்.



தொடர்பாடல் திறன், தீர்மானம் எடுத்தல்:

# கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

ச.சேகர்





கொவிட்-19 தொற்றுப் பரவலால், இலங்கையில் நாளாந்தம் சராசரியாக 150க்கும் மேலான மரணங்கள் பதிவாகும் நிலையில், ஒரு புறத்தில் நாட்டை முடக்குமாறு கோரிக்கைகள் சுகாதாரத் தரப்பிடமிருந்து வலுக்கும் நிலையில், மறு புறத்தில் பொருளாதாரத்தையும் நாள்கூலியையும் பெறும் தொழிலாளர்களின் வருமானத்தையும் கவனத்தில் கொண்டு, பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள அரசாங்கத்தால் அவ்வாறானதொரு பொது முடக்கத்துக்கு செல்லாமல், படிப்படியாக கட்டுப்பாடுகளை விதித்து, இயலுமானவரை நாட்டை திறந்த நிலையில் நடத்திச் செல்ல முற்படுவதை காண முடிகின்றது. இதில் இரவு நேர தனிமைப்படுத்தல் ஊரடங்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், இந்த நாட்டை முடக்குவது மற்றும் திறந்து வைத்திருப்பது தொடர்பில் அரச தரப்புக்குள்ளேயும் முரணான கருத்துகள் வெளிவந்த வண்ணமுள்ளன. குறிப்பாக, அரசாங்கத்தின் பின்வரிசை எம்.பிக்கள் கூடத் தெரிவிப்பது யாதெனில், நாட்டை முடக்கி அப்பாவி பொது மக்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டிய தருணம் இது என்பதாகவே உள்ளது.

இந்தத் தீர்மானத்தை மேற்கொள்வது நாட்டின் ஜனாதிபதி. நாட்டை முடக்குவதா, திறந்திருப்பதா எனும் தீர்மானத்தை மேற்கொண்டு, நாட்டு மக்களுக்கு தாம் அவ்வாறானதொரு தீர்மானத்தை ஏன் மேற்கொண்டேன் எனத் தெரிவிக்க வேண்டியது அவரின் கடமையாகும்.

மாறாக, அரசாங்கத்திலிருந்து கொண்டு, கொவிட்-19 கட்டுப்பாட்டு செயலணியினர் காலையில் ஓர் அறிவித்தலையும் மாலையில் அரசாங்கத்தின் பின்வரிசை மந்திரிகள் மற்றுமொரு அறிவித்தலையும் வெளியிடுவது சிறந்த தொடர்பாடல் திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துவிடவில்லை.

உலகில் கொவிட்-19 பரவலை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நாடு எனும் பாராட்டுதலைப் பெற்ற நாடாக நியுசிலாந்து திகழ்கின்றது. அண்மையில், அந்நாட்டின் பிரதமர் ஜசிந்தா ஆர்டன், இரண்டரை நிமிடங்களினுள் இரண்டு ஆண்டுகளாக நாட்டில் மேற்கொண்ட நடவடிக்கைகளை முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தியிருந்த ஒரு காணொளியை சமூக வலைத்தளங்களில் பரவலாக காண முடிந்தது. ஆனால், நம் நாட்டின் தலைவர் 69 நிமிடங்களாக நாமே சிறப்பாகச் செய்தோம் என்பதை மறைமுகமாக இரவு 8 மணிக்கு நேரலையாக வந்து, பகல் போன்று காட்சியளித்த பகுதியொன்றிலிருந்து தெரிவித்ததும் இதே காலப்பகுதியிலாகும்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தமக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தாம் மேற்கொள்ளும் தீர்மானங்களை நாட்டுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியைச் சேரும். இவருக்கு தொடர்பாடல் ஆலோசகர்களாக, ஊடக ஆலோசகர்களாக, ஊடக பேச்சாளர்களாக நியமனங்கள் பல அண்மையில் வழங்கப்பட்டிருந்த நிலையில், இவ்வாறானதோர் ஆலோசனையை இவருக்கு வழங்காமல் இருப்பார்களா என்பதும் ஆச்சரியமூட்டுவதாக அமைந்துள்ளது.

தமக்கு அதிகாரம் அளித்தவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் தீர்மானங்களை அறிவிக்கும் பொறுப்பு என்பது ஜனாதிபதியின் கடமையாகும். இதுவரையில் நாட்டில் 6,500க்கும் அதிகமான உயிர்கள் கொவிட்-19 தொற்றின் காரணமாக காவு கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய சூழலில் இந்த எண்ணிக்கை விரைவில் 10,000 ஐத் தொடக்கூடும்.

அண்மைய நாடான இந்தியாவில் இந்த டெல்டா பிரள்வு ஏற்படுத்திய தாக்கத்தை கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலையே இன்று நம் நாட்டில் எழுந்துள்ளது. எனவே, கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பெருமளவில் உள்ளன.

சில வாரங்களுக்கு முன்னதாக நம் நாட்டிலும் ஜனாதிபதி மக்களுக்கு உரையாற்றுவதற்காக, அமெரிக்காவின் வெள்ளை மாளிகையிலுள்ள ஜனாதிபதி உரையாற்றும் பகுதிக்கு ஒப்பான ஒரு விசேட பகுதி அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு பொது மக்களின் வரிப் பணமே பயன்படுத்தப்பட்டிருக்கும். அவ்வாறானதோர் உரையாற்றும் பகுதி நிறுவப்பட்டால், இதுபோன்ற நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களைப் பற்றி, பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு அந்தப் பகுதியைப் பயன்படுத்தலாமே!

அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியதில்லை; நாட்டை முடக்க வேண்டியதில்லை; அநாவசிய தேவைகளுக்காக, அத்தியாவசிய தேவைகளின்றி வெளியில் நடமாடாமல் தம்மையும், தமது அன்புக்குரியவர்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இந்த நெருக்கடியான சூழலில், அரசாங்கம் முடக்கத்தை அறிவிக்காவிட்டால், தாம் முடக்கத்தை மேற்கொள்வோம் எனத் தெரிவிக்கும் சில தொழிற்சங்கவாதிகளின் வார்த்தைகளில், உண்மையில் நாட்டு மக்கள் மீதான பற்று காணப்படவில்லை. மாறாக, ஒரு சில அரசியல்வாதிகளின் தூண்டுதல்களும், அரசியல் உள்நோக்கங்களுமே தென்படுகின்றன.

திறந்திருக்கும் நிலைமையின் போதே, நம்மில் பலர் எரிவாயுவுக்காகவும் பால் மாவுக்காகவும் மண்ணெண்ணை வாங்கவும் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. நாட்டை மூடிவிட்டால் வெளியில் வர முடியாது. அவ்வாறு நாடு மூடியிருக்கும் போது நீண்ட வரிசைகளில் நிற்பதற்கு தான் அனுமதி வழங்கப்படுமா?

இந்தக் கொரோனா வைரஸ் நம்மை விட்டு விரைவில் மறைந்து விடப் போவதில்லை. இதனுடன் இனி வாழப் பழகிக் கொள்ளத் தான் வேண்டும். பாதுகாப்புக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். தம் வீட்டில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டு அதன் பாதிப்பு உணரப்படும் வரை இந்த வாக்கியங்கள், கூற்றுகள் அனைத்தும் வெறும் செவிடன் காதில் ஊதிய சங்காகத் தான் பலருக்கும் இருக்கும்.

எனவே, இந்த நிலையைப் பற்றித் தெளிவாக இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும். அந்தத் தொடர்பாடலை அவர் மேற்கொள்வாரா?

மூடுவதா அல்லது திறப்பதா, உறுதியான தீர்மானத்தை எடுத்து, நாட்டு மக்களுக்கு நீங்கள் கூறுங்கள். மாறாக, ஒரே வீட்டிலிருந்து ஒவ்வொருவராக வெளியே வந்து, காலையில் மூடப்படும் எனவும், மாலையில் மூடப்படாது எனவும் கூறி, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றாதீர்கள்.

இந்தச் சூழலில், இவ்வாறு கருத்துத் தெரிவிப்போருடன் உள்ளகத் தொடர்புகளைப் பேணும் சில ஊடகங்களைச் சேர்ந்தவர்கள், தாமே முந்திக் கொண்டு தகவல்களை வழங்குவதாக எண்ணி, மக்கள் மத்தியில் ஒரு பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில், இதோ நாடு முடங்குகிறது, இன்று முடங்கும், நாளை முடங்கும், எப்போதும் முடங்கும் என அறிக்கை வெளியிடுகின்றன.

கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே உள்ளன. நாடு முடங்காது; உங்களுக்காகவும், எங்களுக்காகவும், நாம் அநாவசியமான பயணங்களை முடக்குவோம். நல்லதே நடக்கும்.

தமிழகம்

அ.தி.மு.கவினருக்கு


## தொடர்பில்லை என்றால் அச்சம் ஏன்?



கோடநாடு கொலை வழக்கில் தங்களுக்குத் தொடர்பு இல்லை எனில்அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினர் அச்சப்படத் தேவையில்லை என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி தெரிவித்தார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற பெரியாரின் கனவை, தமிழக அரசாங்கம் நனவாக்கி உள்ளது.

சுப்பிரமணிய சுவாமி போன்றோர் சமூக நீதியை விரும்பாதவர்கள். இந்துக்கள் அல்லாதோர் அர்ச்சகரானால் இவர்கள் கோபப்படுவது நியாயம். இந்துக்கள் அனைவரும் கருவறைக்குள் நுழைவதால் எரிச்சல் அடைகிறார்கள். கோடநாடு கொலை வழக்கில் அ.தி.மு.கவினர் மீது குற்றமில்லை என்றால் அச்சப்படத் தேவையில்லை இவ்வாறு அவர் கூறினார்.



சென்னை

## தாமாகவே அ.தி.மு.கவினர் வெளியேறினார்கள்

மக்கள் பிரச்சினையைப் பேசும் சபையில் தனிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பக்கூடாது எனவும், நேற்றைய கூட்டத்தொடரின்போது அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் தாமாகவே வெளியேறியதாகவும் சபாநாயகர் அப்பாவு விளக்கமளித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வில், கோடநாடு கொலை, கொள்ளை வழக்கை மீண்டும் விசாரிக்கும் விவகாரம் தொடர்பாக அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும், பொய் வழக்கு போடும் திராவிட முன்னேற்ற கழகத்தை கண்டிப்பதாக பதாகை ஏந்தி அமளியில் ஈடுபட்டனர். பின்னர், அவையில் இருந்து வெளிநடப்பு செய்த அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் சட்டசபை வளாகத்தில் தர்ணாவில் ஈடுபட்டதுடன், நேற்றும், இன்றும் நடக்கும் கூட்டத்தொடரை புறக்கணிப்பதாக அறிவித்தன.

இந்நிலையில், சட்டசபையில் இருந்து அ.தி.மு.கவினர் வெளியேற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. இது குறித்து சபாநாயகர் அப்பாவு, சட்டசபையில் விளக்கமளித்தார். அவர் பேசியதாவது: "அ.தி.மு.க எம்.எல்.ஏக்களை சட்ட சபையிலிருந்து வெளியேற்ற நான் உத்தரவிடவில்லை. தாமாகவே அவர்கள் வெளியேறினர். என் அனுமதி பெறாமல், பதாகையை ஏந்தி கூச்சலிட்டனர். மக்கள் பிரச்சினையை பேசும் சபையில் தனிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பக்கூடாது. எனினும் அவர்களின் தனிப்பட்ட பிரச்சினையை பேச நான் அனுமதித்தேன்". இவ்வாறு அவர் விளக்கமளித்தார்.

சென்னை

## ஆளில்லா விமானங்கள் பறக்கத் தடை

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கடற்படை தளங்கள் மீது ட்ரோன் உள்ளிட்ட ஆளில்லா விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் சென்னையில் ஐஎன்எஸ் அடையாறு, அரக்கோணத்தில் ஐஎன்எஸ் ராஜாளி, ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் உள்ள ஐஎன்எஸ் பருந்து, திருநெல்வேலியில் ஐஎன்எஸ் கட்டபொம்மன் உள்ளிட்ட கடற்படை தளங்கள் உள்ளன.

இந்தக் கடற்படைத் தளங்களுக்கு பாதுகாப்பை மேலும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்தக் கடற்படை தளங்கள் மீது ட்ரோன்கள், ஆளில்லா விமானங்கள் உள்ளிட்டவை பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், தடை செய்யப்பட்ட இப்பகுதியில் ட்ரோன்கள் உள்ளிட்டவை இயக்க சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகள், தனியார் ஏஜென்சிகள், பொது சிவில் விமான இயக்குநரகத்திடம் முன் அனுமதி பெற வேண்டும். இதுதொடர்பாக, 'டிஜிஸ்கை' என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஒப்புதல் கிடைத்த பிறகு, அதற்கான அனுமதி கடிதத்தை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான கடற்படை தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என, பாதுகாப்புத் துறை பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கர்நாடகம்

## தடுப்பூசிக்குப் பயந்து மதுஅருந்தும் மக்கள்



உலகையே புரட்டிப் போட்டுள்ள கொரோனா தொற்றில் இருந்து மக்களைக் காக்கும் ஆயுதமாக தடுப்பூசி உள்ளது. தற்போது, ஆர்வத்துடன் மக்கள் கொரோனா தடுப்பூசி போட்டு வரும் நிலையில், பலரிடம் கொரோனா தடுப்பூசி பற்றிய அச்சமும் இருந்து வருகிறது.

இந்த நிலையில் கர்நாடக மாநிலத்தில் கொரோனா தடுப்பூசிக்குப் பயந்து, அதை போட்டுக் கொள்ளாமல் இருப்பதற்காக யாதகிரி மாவட்டத்தில் உள்ள ஒனகெரே கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள் மட்டுமல்லாது பெண்கள் பலரும் மதுஅருந்தும் சம்பவம் அரங்கேறி வருகிறது.

அதாவது மதுபானம் அருந்தினால் கொரோனா தடுப்பூசி போடமாட்டார்கள் என்பதால் அவர்கள் தினமும் காலையிலேயே மதுபானம் அருந்தத் தொடங்கி விடுகின்றனர். இதனால் கடந்த ஒரு வாரமாக தடுப்பூசி போட முடியாமல் சுகாதாரத் துறை ஊழியர்கள் தினசரி அந்தக் கிராமத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர்.

இது அவர்களுக்கு தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண மாவட்ட சுகாதாரத்துறையினரிடம் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

சென்னை

## டெல்டா பிளஸை கண்டறியும் ஆய்வகம்

டெல்டா பிளஸ் வகை கொரோனா வைரஸ் கண்டறியும் நவீன ஆய்வகம் சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் இன்னும் 2 வாரத்தில் தொடங்கப்பட உள்ளது. இதற்காக ரூ.1 கோடி 80 இலட்சம் மதிப்பில்லான இயந்திரம் உள்ளிட்ட ரூ.3 கோடியிலான பகுப்பாய்வு கூடத்தை முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளார். இந்த ஆய்வகத்தில் பணியாற்றக்கூடிய 5 தொழில்நுட்பவியலாளர்கள் பெங்களூர் ஆய்வகத்தில் பயிற்சி பெற்று வந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் அரசாங்க வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தொற்றுக்கு பிந்தைய நலவாழ்வு மையத்தில் தேவையானவர்கள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். தமிழகத்தில் கொரோனா தொற்று 1:2 என்ற விகிதத்தில் உள்ளது. தமிழகத்தில் கொரோனா தொற்றுப் பாதிப்பு குறைந்தாலும், தொடர்ந்து நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் இதுவரை 2 கோடியே 70 இலட்சத்து 30 ஆயிரத்து 337 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

மத்திய அரசாங்கத்திடம் இருந்து, இந்த மாதத்துக்கு இன்னும் 27 இலட்சம் தடுப்பூசிகள் வரவேண்டியுள்ளன. தாதியர்கள் உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி நிரந்தரம் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

புதுடெல்லி

தப்பி ஓடிய சாமியார் நித்யானந்தா

## 293ஆவது பீடாதிபதியாக முகநூலில் அறிவித்துள்ளார்



கர்நாடகா, குஜராத் பொலிஸாரால் தேடப்படும் சாமியார் நித்யானந்தா வெளிநாடு தப்பி ஓடி தலைமறைவானார். அவரைப் பிடிக்க சர்வதேச பொலிஸ் (இன்டர்போல்) உதவியுடன் சி.பி.ஐ அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கொரோனா காலகட்டம் என்பதால் கைது நடவடிக்கைகள் முடங்கி உள்ளன. இதைப் பயன்படுத்தி நித்யானந்தா சமூக வலைத்தளங்களில் வீடியோக்கள் வெளியிட்டு பக்தர்கள் மத்தியில் உரையாற்றி வருகிறார்.

இந்நிலையில் அவர் தனது முகநூல் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் தன்னை 'மதுரை ஆதீனத்தின் 293ஆவது பீடாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டதாக' தெரிவித்துள்ளார்.

மதுரை ஆதீனம் மடத்தில் 292ஆவது பீடாதிபதி அருணகிரிநாதர் உடல் நலக்குறைவால் கடந்த 13ஆம் திகதி உயிரிழந்தார். இந்நிலையில் 293ஆவது பீடாதிபதியாக தான் பதவி ஏற்று கொண்டுள்ளதாகவும், இனி ஒன்லைன் மூலமாக பக்தர்களுக்கு ஆசி வழங்க உள்ளதாகவும் அந்த பதிவுகளில் அவர் தெரிவித்து உள்ளார்.

மேலும் தனது பெயரை 293ஆவது ஜெகத்குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்யானந்தா பரமசிவ ஞானசம்பந்த தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் எனவும் மாற்றி கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.





நிந்தவூரிலிருந்து மூவர்

# தேசிய கபடி அணிக்கு தெரிவு

■ எம்.என்.எம். அப்ராஸ்

இலங்கையின் தேசிய கபடி அணியின் முதலாவது கட்டத் தெரிவில், அம்பாறை மாவட்ட நிந்தவூரில் இருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் வீரர்களான அஸ்லம் சஜா, எச்.எம்.எம். ஹாலிஸ், எ.எ. அப்லால் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவில் அடுத்தாண்டு ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள 19ஆவது ஆசிய மட்ட விளையாட்டுப் போட்டியில், கபடி போட்டிக்காக வீரர்களை தயார்படுத்தும் முகமாக இலங்கை கபடி சம்மேளனத்தால், கொழும்பில் உள்ள விளையாட்டு அமைச்சின் உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அணி வீரர்கள் முதலாவது கட்டதெரிவில் இவர்கள் மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் திறமையை இனங்கண்டு தெரிவு செய்த தேசிய கபடி சம்மேளனத்தினருக்கும் இவர்களுக்கு பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் கீத்துக்கும் மற்றும் மதீனா விளையாட்டு கழகத்தின் தலைவர் எ.எம். அன்சார் உட்பட கழக சிரேஷ்ட வீரர்களுக்கும் இவர்களுக்கு ஆரம்பம் முதல் இதுவரையும் பயிற்சி மற்றும் ஆலோசனையை வழங்கி வரும் ஆசிரியர் எஸ்.எம். இஸ்மத் ஆகியோருக்கு அம்பாறை மாவட்ட கபடி சம்மேளனத்தின் தலைவர் எ.எல். அனஸ் அஹ்மட் உட்பட்ட உறுப்பினர்கள் நன்றியினை தெரிவித்தனர்.

அஸ்லம் சஜா, எச்.எம்.எம். ஹாலிஸ் ஆகியோர் இலங்கை கபடி அணியின் மூலம் சர்வதேச ரீதியாக இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




ஆப்கானிஸ்தானின்

## பயிற்றுவிப்பாளராக அவிஷ்க

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான, ஆப்கானிஸ்தான் ஆண்கள் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக இலங்கையணியின் முன்னாள் வீரர் அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அறிவிப்பை டுவிட்டர் வழியாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டிருந்தது.

நீண்ட காலத்துக்கு குணவர்தனவை கிரிக்கெட் சபை வேண்டியபோதும், இலங்கையில் நடைபெறவுள்ள குறித்த தொடருக்கு மாத்திரமே தனது பங்களிப்பை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

உலகக் கிண்ணத்துக்கான

## அவுஸ்திரேலிய குழாமில் ஜொஷ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில் விக்கெட் காப்பாளர் ஜொஷ் இங்லிஸ் இடம்பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியக் குழாமில் இங்லிஸ் இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும். இந்நிலையில், டேவிட் வோணர், ஸ்டீவ் ஸ்மித், கிளென் மக்ஸ்வெல், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், பற் கமின்ஸ், கேன் றிச்சர்ட்ஸன் ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

டயலொக் அழைப்பு கிரிக்கெட் தொடர்:

## பச்சையை வென்ற சாம்பல்

டயலொக் இலங்கை கிரிக்கெட் சபை அழைப்பு இருபதுக்கு – 20 லீக் தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் பச்சை அணியுடனான போட்டியில் டக் வேர்த் லூயிஸ் முறையில் நான்கு ஓட்டங்களால் இலங்கை கிரிக்கெட் சபையின் சாம்பல் அணி வென்றிருந்தது.

மழை காரணமாக 10 ஓவர்கள் கொண்டதாகவே குறித்த போட்டி இடம்பெற்றிருந்ததுடன், பின்னர் முதலாவது இனிங்ஸ் முடிவில் மேலதிக மழை காரணமாக எட்டு ஓவர்களாக இரண்டாவது இனிங்ஸ் குறைக்கப்பட்டதுடன், பின்னர் இரண்டாவது இனிங்ஸின் 5.3 ஓவர்களோடு போட்டி முடிவுக்கு வந்திருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பச்சை

சாம்பல்: 137/3 (10 ஓவ.) (துடுப்பாட்டம்: தசுன் ஷானக ஆ.இ 55 (22), கமில் மிஷார ஆ.இ 46 (24), லசித் குறூஸ்புள்ளே 17 (08), சரித் அஸலங்க 08 (03) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 1/7 [1])

பச்சை: 69/3 (5.3 ஓவ.) (வெ.இ: 74) (துடுப்பாட்டம்: லஹிரு உதார 33 (10), பத்தும் நிஸங்க 21 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: சத்துரங்க டி சில்வா 2/21 [2], புலின தரங்க 0/18 [2])

இதேவேளை, முன்னதாக இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சபையின் நீல அணியுடனான போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபையின் சிவப்பு அணி வென்றிருந்தது.

# மலன் உள்ளே; சிப்லி வெளியே



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாமுக்கு டேவிட் மலன் மீள அழைக்கப்பட்டுள்ளார்.

டொம் சிப்லியை குழாமில் டேவிட் மலன் பிரதியிடுகிறார்.

இதேவேளை, ஸக் குறொலியும் குழாமில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜேக் லீச் மேலதிக வீரராகவே பெயரிடப்பட்டுள்ளார்.

குழாம்: ஜோ றூட் (அணித்தலைவர்), மொயின் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயார்ஸ்டோ, றோறி பேர்ண்ஸ், ஜொஸ் பட்லர், சாம் கர்ரன், ஹஸீப் ஹமீட், டான் லோரன்ஸ், சஹிம் மஹ்மூட், டேவிட் மலன், கிரேய்க் ஒவெர்ட்டன், ஒலி போப், ஒலி றொபின்ஸன், மார்க் வூட்.

ஆப்கானிஸ்தான்

# ஆளும் சபையால் நிர்வகிக்கப்படும்



ஆளும் சபை ஒன்றால் ஆப்கானிஸ்தான் நிர்வகிக்கப்படும் என்றும், அவை அனைத்துக்கும் பொறுப்பானவராக தலிபான்களின் தலைவர் ஹைபதுல்லாஹ் அகுன்ட்ஸடா இருப்பார் என தலிபானின் சிரேஷ்ட உறுப்பினர் வஹீடுல்லாஹ் ஹஷிமி றொய்ட்டர்ஸுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் ஆயுதப் படைகளின் முன்னாள் விமானிகள், படைவீரர்களையும் தம்முடன் இணையுமாறு தலிபான் கோரியுள்ளதாக, தலிபான்களின் தீர்மானங்களை அறிந்த ஹஷிமி குறிப்பிட்டுள்ளார்.

ஹஷிமியின் இக்கருத்தானது கடந்த 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தலிபான் அதிகாரத்தில் இருந்ததை பிரதிபலிக்கிறது. அப்போதைய தலிபான்களின் தலைவர் முல்லா ஒமர் நிழலாக இருக்க, நாட்டை சபை ஒன்றே நடத்தியிருந்தது.

இந்நிலையில், சபையின் தலைவருக்கு மேலான வகிபாகம் ஒன்றை அகுன்ட்ஸடா வகிப்பார் என ஹஷிமி குறிப்பிட்டுள்ளார்.

தவிர, அகுன்ட்ஸடாவின் பிரதித் தலைவர் ஜனாதிபதியின் வகிபாகத்தை ஆற்றுவார் என ஹஷிமி தெரிவித்துள்ளார்.

தலிபான்களுக்கு, முல்லா ஒமரின் மகனான மௌலவி யகூப், சக்தி வாய்ந்த ஹக்கானி வலையமைப்பின் தலைவரான சிராஜுதின் ஹக்கானி, கட்டார் தலைநகர் டோஹாவிலுள்ள தலிபானின் அரசியல் அலுவலகத்துக்குத் தலைமை தாங்கும் அப்துல் கானி பர்டார் ஆகியோர் பிரதித் தலைவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதேவேளை, ஜனநாயக நாடாக ஆப்கானிஸ்தான் காணப்படாது எனத் தெரிவித்த ஹஷிமி, ஷரியா சட்டத்தையே அமல்படுத்துவோம் எனக் கூறியுள்ளார்.



ஐ.அ. அமீரகம்

## ஐ.அ. அமீரகத்தில் ஆப்கான் ஜனாதிபதி

ஐக்கிய அரபு அமீரகத்தில், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரஃப் கானி அடைக்கலம் புகுந்துள்ளதாக அமீரகம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை நோக்கி தலிபான்கள் முன்னேறிய நிலையில் ஆப்கானிஸ்தானை விட்டு ஜனாதிபதி கானி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியேறியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கானியையும், அவரது குடும்பத்தையும் மனிதாபிமான அடிப்படைகளில் வரவேற்பதாக அமீரகத்தின் வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாரியளவு பணத்துடன் தான் அமீரகத்துக்கு பயணமானதான வதந்திகள் முழுமையாக அடிப்படையற்றவை, பொய்கள் என ஜனாதிபாதி கானி குறிப்பிட்டுள்ளார்.



பேர்க்கினா பாசோ


போராளிகளின்

## தாக்குதலில் 47 பேர் பலி

வட பேர்க்கினா பாஸோவில் 47 பேரை போராளிகள் கொன்றுள்ளனர்.

வட நகரமான அர்பின்டாவுக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த தாக்குதலில், 30 பொதுமக்கள், 14 படைவீரர், மூன்று அரசாங்க சார்பு ஆயுதக் குழுவினரை போராளிகள் கொன்றுள்ளதாக பேர்க்கினா பாஸோ அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், 16 போராளிகளை அரசாங்கப் படைகள் கொன்றதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்ட நிலையில், 58 போராளிகளை அரசாங்கப் படைகள் கொன்றதாக பாதுகாப்புத் தகவல் மூலம் ஒன்று தெரிவித்துள்ளது.



சிங்கப்பூர்

## முகக்கவசம் அணியாதவருக்கு சிறை

பிரித்தானிய நபர் ஒருவருக்கு ஆறு வார சிறைத் தண்டனைத் தீர்ப்பை சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்று வழங்கியதாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுவெளியில் முகக்கவசம் ஒன்றை அணிய மறுத்து கொரோனா வைரஸ் விதிமுறைகளை இவர் மீண்டும் மீண்டும் மீறியமையை அடுத்தே இவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ரயிலொன்றில் இவ்வாண்டு மே மாதம் முகக்கவசம் அணிய மறுத்தமை, தொடர்ந்து கடந்த மாதம் நீதிமன்றத்தில் முகக்கவசம் அணிய மறுத்தை, பொதுமக்களுக்கு இடையூறு, அரச அதிகாரிகளை நோக்கி அச்சுறுத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களை குறித்த நபர் எதிர்கொண்டுள்ளார்.




ஐ. அமெரிக்கா

ட்ரம்ப்பிடமிருந்து

## பொதுமன்னிப்பு பெற்றவர் கைது

ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பால் பொதுமன்னி ப்பளிக்கப்பட்ட ஏழு மாதங்களில், நியூ யோர்க்கில் புதிய மாநில குற்றச்சாட்டுக்களில் கென் குர்ஸன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்பின் மருமகனான ஜரெட் குஷ்னரின் நண்பரும், தனிப்பட்ட வழக்கறிஞர் றூடி கில்யானியின் முன்னாள் உதவியாளரே குர்ஸன் ஆவார்.

குர்ஸனின் கடந்த 2015ஆம் ஆண்டு விவகாரத்து தொடர்பான இணையவழி அச்சுறுத்தலில் அவரை புரூக்லினிலுள்ள அரச வழக்குத் தொடருநர்கள் குற்றஞ்சாட்டியதையடுத்தே பொதுமன்னிப்பை அவர் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 20 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.